கிருஷ்ணா கலை & அறிவியல் கல்லூரி

கொன்னைத்தண்ணிப்பட்டி - கரூர்.

இணைய வழிக் கற்பித்தல் - நன்னூல் - சொல்லதிகாரம்

செம்மைப்பாடம்-௨ - ACCTA4

அலகு-1 - பெயரியல்

சொல்லின் பொது இலக்கணம் - 5. வழக்கு

வழக்கு:

மனிதர்கள் தங்களைச் சார்ந்தவற்றுக்கும், மனிதர்கள் சார்ந்த பிறவற்றுக்கும் இடையே உள்ள நடைமுறை வழக்காகும். இதில் மொழி என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

அவ்வாறு தமிழ்மொழியில் வழங்கப்படும் சொற்கள் பேச்சுமொழியில் ஒன்றாகவும், எழுதும் மொழியில் ஒன்றாகவும் தொன்று தொட்டு தமிழ் மக்கள் பின்பற்றுகின்றனர். இதுவே வழக்கு எனப்படும். இவை செய்யுள் வழக்கு, பேச்சு வழக்கு என இலக்கண நூல்கள் வகைப்படுத்துகின்றன.

வழக்கின் தொகை (2)

1. இயல்பு வழக்கு
2. தகுதி வழக்கு

## வழக்கின் விரி: (6)

1. இயல்பு வழக்கு (3)
   - ① இலக்கணமுடையது
   - ② இலக்கணப்போலி
   - ③ மரூஉ

2. தகுதிவழக்கு (3)
   - ① இடக்கரடக்கல்
   - ② மங்கலம்
   - ③ குழூஉக்குறி

## 1. இயல்பு வழக்கு

ஒரு பொருளுக்கு மக்கள் எந்தச் சொல்லால் வழங்குகின்றனரோ, அதே சொல்லால் வழங்குவது இயல்பு வழக்காகும். ஒரு பொருளைச் சொன்னவுடன் அதற்கு எப்படி விளங்க வைக்க முடியுமோ அதே வகையில் கூறுவதாகும்.

## 2. தகுதி வழக்கு

ஒரு பொருளை அறியக் கூடிய வகையில் இயல்பாய் வழங்குவதை விடுத்து, அதை சிறப்பு கருதி தகுதியான சொற்களால் வழங்குவது தகுதி வழக்காகும்.

நூற்பா - 267

"இலக்கணம் உடையது இலக்கணப் போலி
மரூஉ என்று ஆகும் மூவகை இயல்பும்
இடக்கர் அடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமுத் தகுதியொடு ஆறாம் வழக்கியல்"

என வழக்கின் இலக்கணம் ஆறாக வகைப்படுத்துகிறார் பவணந்தி முனிவர்.

# 1. இயல்பு வழக்கு (3)

## 1. இலக்கணமுடையது:

மரபு மாறாமல் தொன்று தொட்டு இலக்கண முறையோடு இயல்பாக பொருளை விளங்க வைப்பது.

(எ-டு) - நிலம், நீர், மரம், தீ

## 2. இலக்கணப் போலி:

இலக்கண முறையில் மாறி வழங்கப்பட்டாலும், இலக்கணமுடையது போல தொன்று தொட்டு வழங்கி வருவதாகும்.

(எ-டு) நகர்ப்புறம் → புறநகர், கோவில் → கோயில், இல்முன் → முன்றில், என இலக்கணப் போலியாய் வழங்கிவருது.

## 3. மரூஉ:

இயல்பாக வழங்கப்படுகின்றவற்றில சில எழுத்துக்கள் திரிந்தும், கெட்டும் வழங்குவதே மரூஉ.

(எ-டு) தஞ்சாவூர் → தஞ்சை, சோழநாடு → சோணாடு என மருவி வருவதாகும்.

# 2. தகுதி வழக்கு (3)

## 1. இடக்கர் அடக்கல்:

இயல்பாக வழங்கக்கூடிய தகாத சொற்களை விடுத்து வேறொரு சொல்லால் கூறுவது.

(எ-டு) மலம் கழுவி வந்தேன் என்பதை கால் கழுவி வந்தேன் என்று தகுதியான சொற்களால் வழங்குவது.

## 2. மங்கலம்: [நன்மை]

மங்கலம் அல்லாத ஒன்றை மங்கலமாக கூறுவது.

(எ-டு) செத்தாரைத் துஞ்சினார் என்றல்.

Scanned with CamScanner

3. குழூஉக்குறி: [குழு, கூட்டம், இனம்]

தங்களது கூட்டத்திற்கு மட்டும் விளங்கும் -படியான சொற்களால் அப்பொருளைக் குறிப்பது.

(எ-டு) பொற்கொல்லர் பொன்னைப் 'பறி' என்றல்
வேடர் கள்ளைச் 'சொல்விளம்பி' என்றல்.

பார்வை நூல்:

1. நன்னூல் - சொல்லதிகாரம்
[காண்டிகை உரை] - முனைவர் ச. திருஞான சம்பந்தம்
கதிர் பதிப்பகம், தெற்கு வீதி
திருவையாறு - 613204.
முதற் பதிப்பு - நவம்பர் 2009.

2. நன்னூல் - சொல்லதிகாரம் [காண்டிகை உரை]
- புலவர். இரா. வடிவேலன்
சாரதா பதிப்பகம், சென்னை - 600014.
நான்காம் பதிப்பு - 2017

3. வலையொளி இணைப்பு:
https://youtu.be/vu0-c2dVf2Y

Scanned with CamScanner